**நம்பகத்தன்மையான மின்சார வழங்கல் மேம்படுத்தலுக்கு உதவியளித்தல் செயற்திட்டம் (இலங்கை மின்சார சபை - ஆசிய அபிவிருத்தி வங்கி - கடன் உடன்படிக்கை இல. 3409-எஸ்ஆர்ஜ) -2024**

---

நம்பகத்தன்மையான மின்சார வழங்கல் மேம்படுத்தலுக்கு உதவியளித்தல் செயற்திட்டத்தின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை மின்சார சபைக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 திசெம்பர் 19 ஆம் திகதிய 3409-எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.05 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், இலங்கை மின்சார சபை செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுல்ப்படுத்தல் முகவராக உள்ளது. மின்சார வழங்கல் மற்றும் விநியோக முறைமைகளின் வினைத்திறன் மற்றும் நம்பகத்தன்மையை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 24,228.15 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 160.20 மில்லியனானதுடன் அதில் ரூபா 17,392.24 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 115 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. எவ்வாறெனினும் ரூபா 13,611.31 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 90 மில்லியன் பெற்றுப்கொள்ளப்பட்டது. மிகுதி ரூபா 6,836 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 45.2 மில்லியன் இலங்கை மின்சார சபையால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2017 யூன் 29 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2022 மார்ச் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2026 மார்ச் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 செயற்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம்

SESRIP செயற்திட்டத்தின் கீழ் இலங்கை மின்சாரசயையால் அமுலாக்கப்பட்ட 08 பொதிகளில் பொதி 04, 07, மற்றும் 11 இன் நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்தது. பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்தவத்தின் பதில் | கணக்காய்வளருடைய பரிந்துரைகள் |
|---|---|---|---|
| | **பொதி 04** | | |
| (அ) | 33 KV கோபுர வழியளில் 285 கிமீ மற்றும் 33 KV கன்ரெறீசின் 13 எண்ணிக்கைகள் என்பவற்றிற்கான ஒப்பந்தம் 2019 மே 30 இல் ரூபா 6,782 மில்லியன் அண்ணளவாக ஐ.அ.டொலர் 23,291,732 + இ.ரூபா 3,025,335,717 கிரயத்தில் வழங்கப்பட்டதுடன் 2021 ஒக்தோபர் 27 இல் 730 நாட்களிற்குள் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது.<br>எவ்வாறாயினும், 1251 நாட்களால் 04 சந்தர்ப்பங்களில் 2025 மே 31 ரைவ கால நீடிப்பு (EOT) வழங்கப்பட்டிருந்தது டன் செயற்திட்டத்தால் மேலும் நீடிப்புக்கள் செயற்பாடுகள் செயற்படுத்தப்படுகின்றன. இதன்ப EOT ஆரம்ப ஒப்பந்த காலத்தின் 02 தடவைகளை மேவு வேண்டியிருக்கும்.<br>மேற்குறிப்பிட்டவாறு ஒப்பந்தகாரருக்கு கால நீடிப்பகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி மற்றும் பௌதீக முன்னெற்றம் முறையே 70.5 சதவீதம் மற்றும் 73.8 சதவீதமாக இருந்தது. அந்த கால நீடிப்பக்களின் விளைவால் நடுத்தர வேல்டேச்சின் நம்பகத் தன்மையை முன்னேற்றுத்தில் விளைவை அடைவதில் தாமதம், சிராமிய மின்வலு விரிவாக்கல் மற்றும் செயற்திட்டத்தின் புதுப்பிக்ககூடிய உள்ளீட்டு உறிஞ்சல் என்ப அவதானிக்கப்பட்டது. | கோவிட் நோய் தொற்று, இலங்கையில் நிதி ஸ்திரத்திரமின்மை, ஒப்பந்த தகராறகள் என்பவன காணமாக நிர்மாணத்தில் பிரதானமாக தாமதம் விளைந்தது. இது நீடிக்கப்பட்ட காலத்திற்குள் செயற்திட்டத்தை பூர்த்தியாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. | விரிவான கண்காணிப்பு நடைமுறைகள் தாபிப்பதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைவதற்கு செயற்திட்டத்தை பூர்த்தியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் 16 வழிகளின் 285 கிமீ இல் மஹாவ மின் நிலையம் முதல் மா- எலியா கன்றறி வரை 02 வழிகளில் 3.8 | மாத்தறை- ஜகபட்ட மின் வழியிற்கானதை தவிர சகல ஏனைய வழிகளும் நடைமுறையில் உள்ளன. மாத்தறை GSS முதல் ஜகபட்ட மின் வழி வரை கொள்வனவு | முறையான கண்காணிப்பு நடைமுறைகள் அமுலாக்குவதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட |

| | | | |
|---|---|---|---|
| | கி.மீ மாத்திரம் பூர்த்தியாக்கப்பட்டதுடன் அம்பாறை GSS முதல் உகண கன்றறி வரை 100 சதவீதம் பூர்த்தியாக்கல் வேலைகள் காட்டப்பட்டதுடன் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாத்தறை GSS முதல் ஜகபட்ட மின் வழி வரை 21 கிமீ இற்கு எவ்வித வேலைகளும் தொடங்கப்பட்டிருக்கவில்லை. | செய்யப்பட வேண்டும் ஏனென்றால் மின்வழி ஜகபட்ட கன்றறி முதல் வலீகம் GSS இற்கு (புதிய முன்மொழிவு) மாற்றமடைந்தது. | நோக்கங்களை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | செயற்திட்டத்தின கீழ் நிர்மாணிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட 13 கன்றறீசில் எந்தவொரு கன்றறீஸ் வேலைகளும் அண்டு இறுதிவரை தொடங்கப் பட்டிருக்காததுடன் 07 கன்றறிஸ்கள் 25 சதவீதத்திற்கும் 50 சதவீதத்திற்கும் இடையில் இருந்தது. மேலும் மீளாய்வாண்டு இறுதிவரை வருகன்டெனியாவில் ஒரு கன்றெறியில் எவ்வித வேலைகளும் தொடங்கப்பட்டிருக்கவில்லை. | அடித்தன நிர்மாண வெலைகளின் முன்னேற்றம் 80 சதவீதத்தை அடைந்திருந்ததுடன்உராய்வு முன்னேற்றம் 65 சதவீதத்தை அடைந்திருந்தது. எவ்வாறாயினும் நெறிப்படுத்தல் உபகரணங்கள் இன்மையால் நெறிப்படுத்தலின் முன்னெற்றம் 38 சதவீதமாக இருந்தது. இலக்களை அடைவதற்கு மொத்த எண்ணிக்கையை அதிகரிக்க வேணடுமென ஒப்பந்தகாரர் அறிவித்திருந்தார். | விரிவான கண்காணிப்பு நடைமுறைகள் தாபிப்பதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைவதற்கு செயற்திட்டத்தை பூர்த்தியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்தவத்தின் பதில் | கணக்காய்வளருடைய பரிந்துரைகள் |
|---|---|---|
| பியகமவில் உப மின் நிலையத்தில் நிலையான பார் முறைமை பொருத்துவதின் முற்பணக் கொடுப்பனவு தொடர்பில் B1 விடய கொடுப்பனவின் பிரகாரம் வேலைகள் பூர்த்தியாக்கல் சான்றிதழ் வழங்குவதற்கு முன்னர் அல்லது நிறுத்துவதற்கு முன்னர் தொழிலாரம்பிப்பு முற்பணம் திருப்பிச் செலுத்தப்பட்டிருக்கவில்லை. ஆதலால் நிலுவையாக இருக்கின்ற மீதிகளும் ஒப்பந்தகாரரால் உடனடியாக தொழில் வழங்குவோருக்கு செலுத்த வேண்டியிருக்கும். எவ்வாறாயினும், பகுதியில் ரூபா 240,000 மற்றும் ரூபா 884,951 தொகைக்கு சமமான ஐ.அ.டொலர் 4,695.20 ஆன அறவிடப்படாத முற்பணங்கள் சொல்லப்பட்ட ஏற்பாட்டிற்கு முரணாக பூரததியாக்கல் சான்றிதழ் மீது (ஏதாவது வேறு நோக்கங்களிற்காக இடம்பெற்றது) விடுவக்கபட்டிருந்த பிடி காசிலிருந்து அறவிடப்பட்டிருந்தது. . | ஒப்பந்தத்தில் விடயங்கள் குறைவாக பயன்படுதியமையால் செயற்திட்ட பூர்த்தியாக்கலில் முற்பணம் மிகுதியாக இருக்கின்றன. எனவே, குறைவாக பயனபடுத்திய தொகை காரணமாக மிகுதியாக இருக்கின்ற முற்பணம் பூர்த்தியாக்கல் சான்றிதழ் மீது விடுவிக்கப்பட்ட பிடி காசிலிருந்து அறவிடப்படுவதனால் செயற்திட்ட பூர்த்தியாக்கலில் (கடன் சேமிப்பு) அறவிடப்படுகினறன. | கொள்வனவு நடைமுறையை மீறிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக விசாரணை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2.3 நிதிகளின் குறைபயன்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்தவத்தின் பதில் | கணக்காய்வளருடைய பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ஆசிய அபிவிருத்தி வங்கியால் செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 90 மில்லியன் ஒதுக்கீட்டில் 79 சதவீதத்தை பயன்படுத்துகின்ற ரூபா 17,315.02 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 71.34 மில்லியன் செயற்திட்ட நடவடிக்கைகள் தொடங்கி 08 ஆண்டுகள் கடந்த பின்னர் மீளாய்வாண்டு இறுதியில் பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆகவே, ஐ.அ.டொலர் 18.65 மில்லியன் 2026 மார்ச் 31 இல் கடன் முடிவுத்தலிற்கு முன்னர் மேலும் கைதவிர்க்கப்பட வேண்டுமென வேண்டப்பட்டது. | 2026 மார்ச் 31 வரை மிகுதியாக 15 மாதங்கள் உள்ளதுடன் PMU இன் நோக்கங்கள் கடன் காலப்பகுதி பூர்த்தியாவதற்கு முன்னர் ஒதுக்கப்பட்ட நிதிகளை முழுமையாக பயன்படுத்த வேண்டியிருந்தது. | கடன் பெறுகையை வினைத்திறனாக பயன்படுத்துவதன் மூலம் பௌதீக முற்னேற்றத்தை நிறைவேறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2023 செப்தெம்பர் 20 இலிரந்து 2024 திசெம்பர் 11 வரை விசேட வெளிநாட்டு நாணய வங்கி கணக்கின் ஊடாக செலுத்தப்பட்ட ரூபா 17,315.02 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 71,344,591 தொகையில் ரூபா 1,275.12 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 4.17 மில்லியன் செலுத்தப் பட்டவையாக இருந்தது. ஆனால், ADB கடனிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிகக்கை எடுக்காமல் நிதிக்கூற்றுக்களில் இன்னமும் கோரப்பட்டிருக்கவில்லை. | அந்த கொடுப்பனவுகள் தகுதியுடைய செலவினங்களிற்கு ADB ஆல் வழங்கப்பட்ட முற்பண கணக்கின் ஊடாக செய்யப்பட்டிருந்தது. ADB இடமிருந்து கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கபட்டிருந்தது. உள்நாட்டு முகவருடைய ஒப்பந்தகாரர் எண்ணிக்கைகள் (PCSS) ADB இடமிருந்து பெறப்பட்டிருந்தது. | தாமதமில்லாமல் நிதிகளை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | கடன் தொகையின் ஒதுக்கீட்டின் பிரகாரம் ஐ.அ.டொலர் 6.3 மில்லியன் தொகை கடப்பாடு மற்றும் வட்டிக் கட்டணங்களிற்காக ஒதுக்கப் பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் சகல ஒதுக்கீடுகளும் பயன் படுத்தப்பட்டிருந்தது. அவற்றில் ஆண்டின் போது CEB ஆல் செய்யப்பட்ட ரூபா 4.54 மில்லியன் சமமான ஐ.அ.டொலர் 15,447.83 உள்ளடங்கலாக ரூபா . 185.29 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 874,035.85 ஆன தொகை கடன் கைதவிர்ப்பில் தாமதம் காரணமாக 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடப்பாட்டு கட்டணங்களாக ஏற்பட்டிருந்தது. மேலும் கடப்பாட்டு கட்டணங்களின் ஒரு பகுதி சிக்கனமற்றதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. எதிர்காலத்தில் கைதவிர்க்கப்படாத கடன் தொகைகளில் விதிக்கப்பட்ட கடப்பாட்டு கட்டணங்கள் CEB நிதிகளில் ஏற்படவேண்டி இருக்கும். ஆகவே, இது CEB இற்கு மேலதிக சுமையாக இருக்கும். | கடப்பாட்டுக் கட்டணங்கள் கடன் உடன்படிக்கை கைசாட்திட்டு தொடங்கி ADB ஆல் விதிக்கப்பட்டது ஆகவே இது 60 நாட்களின் பின்னர் தவிர்க்க முடியாதது. செயற்திட்ட பூர்த்தியாக்கலிலுள்ள தாமதங்கள் எதிர்பாராத பல்வேறு காரணங்களால் ஏற்பட்டது. செயற்திட்ட நீடிப்புகள் தகுதியான மற்றும் நியாயமான காரணங்களிற்காக மாத்திரம் வழங்கப்பட்டது. இதன்படி கடப்பாட்டு கட்டணங்கள் ஏற்படல் அந்த நிபந்தனைகளின் கீழ் தவிர்க்க முடியாதது என சான்றுகள் உள்ளது.. | தாமதமில்லாமல் நிதிகளை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |